**R 5172 (page 35)**

# சீஷத்துவத்தின் விலைக்கிரயம்

## THE COST OF DISCIPLESHIP

*''வையப்பட்டு, ஆசீர்வதிக்கிறோம்; துன்பப்பட்டு சகிக்கிறோம்.'' 1 கொரிந்தியர் 4:12*

தேவன்தாமே அன்பாயிருக்கிறபடியால், அவர் தமது ஜனங்களுக்கு கொடுத்துள்ள மிக உயர்ந்த சீரிய பரிபூரணம் அன்பின் திட்ட அளவாக இருக்கிறது. இதற்கு மேலான திட்ட அளவை நாம் கற்பனை செய்ய முடியாது, அதற்கு மேலாக யாரும் அடைய முடியாது. அது விசேஷித்த குணலட்சணமாக இருக்கிறது. இது இல்லாமல் கிறிஸ்து இயேசுவுக்குள்ளான தேவனுடைய பரம அழைப்பின் பரிசை யாரும் பெற இயலாது. பரிபூரணத்தின் இந்த அடையாளம் நமது கர்த்தரில் முத்திரையிடப்பட்டது. பிதாவின் சித்தத்தை எல்லா வகைகளிலும் செய்ய விரும்பமுள்ளவராயிருந்தார்; ஆதாமின் பாவத்தினால் மரண தண்டணைக்குட்பட்டிருந்த அனைவருக்காகவும் தமது ஜீவனை கொடுக்கவும் விருப்பமுள்ளவராக இருந்தார்.

எனினும் பரிபூரண அன்பின் இந்த எல்லையை அடைய அவருக்கு ஓட தேவையிருக்கவில்லை. ஏனெனில் அவர் எப்பொழுதும் ''பரிபூரணராகவும் பரிசுத்தராகவும் குற்றமற்றவராகவும் பாவிகளுக்கு விலகினவராகவும்'' இருந்தார். (எபிரேயர் 7:26) மாறாக சபையானது ஆதாமினால் வந்த விழுந்து போன சுபாவத்தையும், இயற்கையாகவே அபூரணத்தையும் உடையதாக இருக்கிறது. ஆனால் ஆட்டுக்குட்டியானவரின் இரத்தத்தினால் நமது பாவ கறைகளை எல்லாம் கழுவப்பட்டவர்களாக இருக்கிறோம். பரிபூரண அன்பின் எல்லையை நாம் படிப்படியாக அடைவோம். முதலாவது நாம் இருதய எண்ணத்தில் பூரணத்தை முதலாவது அடைவோம். அதன் பிறகு நீதியில் நமது குணம் உருவம் பெறுவதற்கான அனுபவங்களை கடந்து செல்வோம். இந்த அனைத்து சோதனைகள் மற்றும் துன்பங்களில் தேவனுடைய பரிசுத்த சித்தங்களை நாம் எப்பொழுதும் செய்பவர்களாக இருப்பதை விளங்கப்பண்ண வேண்டும்.

தேவன் எதிர்பார்க்கிற திட்ட அளவில் நாம் இல்லை என்பதை உணர்ந்தும் கூட, இந்த அன்பின் குணத்தை நமது கர்த்தராகிய இயேசுவில் நாம் பார்க்கிறதினால் நாம் அதை மதிக்கிறோம். இருந்த போதிலும் தேவனுடைய சித்தத்திற்கு இசைவாக நாம் எல்லாவற்றிலும் பூரண அன்பை உடையவர்களாக இருக்க வேண்டும் என்பது நமது மகா விருப்பமாக இருக்கிறது. நாம் இருதய எண்ணத்தில் பூரணத்தை அடைந்த பிறகு, இதை அடைவதற்கான சோதனை இனி நமக்கு இராமல் நமது குணம் உருவம் பெறுவதற்கான சோதனையே இருக்கும். அப்போஸ்தலர் பவுல் கூறுகிறதாவது: ''சகலத்தையும் செய்து முடித்தவர்களாய் நிற்க வேண்டும்.'' பூரண அன்பிற்கு மேலாக நாம் முன்னேறமாட்டோம். ஏனெனில் தேவன் ஒருவரிடத்தில் செய்யப்பட வேண்டும் என்கிற விருப்பத்திற்கு மேலாக யாரும் செய்ய முடியாது. அவர் ஐந்து வருடம் வாழ்ந்தாலும் சரி, ஐம்பது வருடம் வாழ்ந்தாலும் சரி, அதற்கு மேல் அவரால் செய்ய இயலாது. பரிபூரண அன்பே அவரிடம் எதிர்பார்க்கப்பட்ட எல்லையாக இருக்கிறது. இதற்கும் மேலான எல்லையை அவரால் அடைய முடியாது.

ஒருவர் அன்பின் எல்லையில் நிற்கும் போது, சோதனைகள் அவரை இன்னும் பலப்படுத்துகிறது. விரோதம், பொறாமை, கோபம் மற்றும் சண்டை போன்றவைகளில் நம்மை தூண்டும்படியான அனுபவங்களை நாம் அடிக்கடி கடந்து செல்கிறோம். இந்த சோதனைகளினால் நாம் மேற்கொள்ளப்பட்டு, பூரண அன்பின் நிலைமையிலிருந்து நாம் விழுந்து போவோமானால், நமது ஓட்டத்திற்கான பரிசை இழந்துவிடுவோம். (பிலிப்பியர் 3:14) இப்படியாக விழுந்துபோகிறவர்கள், அபிவிருத்திக்காக திரள் கூட்டத்திற்குள் செல்வார்கள். ஆனால் அனைத்து அன்பையும் அவர் இழப்பாரானால், அவர் இரண்டாம் மரணத்திற்குள், செல்வார். இந்த இரண்டு காரியங்களிலும் பூரண அன்பின் எல்லையிலிருந்து கீழே சென்றுவிடுகிறார். இந்த பூரண அன்பின் அளவுதான், தேவனை முதன்மையாக நேசிக்கிறவர்களுக்கு தேவன் வைத்திருக்கிற மகிமையான காரியங்களில் பங்குபெற்று ராஜ்யத்தில் இருக்க விரும்புகிறவர்களுக்கு இருக்க வேண்டிய அன்பின் திட்ட அளவாகும்.

### உதாரகுணமும் தருமசிந்தனையுமே தேவனுடைய ஜனங்களின் குணம்

விழுந்து போன நிலைமையின் மனோபாவத்தையும், பலவீனத்தையும் மேற்கொள்கிற மனச்சார்பை தமது அடியார்களிடம் காணவும் தமது அடிச்சுவட்டை பின்பற்றவும் நமது கர்த்தர் விரும்புகிறார். அவரைப்பற்றி இப்படியாக எழுதப்பட்டுள்ளது: ''கிறிஸ்துவும் நமக்காக பாடுபட்டு, நாம் அவருடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்து வரும்படி நமக்கு மாதிரியை பின்வைத்துப் போனார்... அவர் வையப்படும்போது பதில் வையாமலும், பாடுபடும்போது பயமுறுத்தாமலும்...'' (1 பேதுரு 2:21,23) வையப்படுவது என்பது இழிவாக காணப்படும்படி செய்வது, தீயவைகளை பேசுதல் என்பது அவதூறு பேசுவது ஆகும். அநீதியில் கோபங் கொள்வதும், தீமைக்கு தீமை பேசுவதும் நாம் பெறுவதற்கு ஏற்ப நன்மை செய்வதும், முடிந்தால் கொஞ்சம் அதிகமாக நன்மை செய்வதும் அனைவரது சுபாவமாக இருக்கிறது. நாம் விழுந்துபோன நிலையிலும் மனதில் சமநிலையற்றும் இருப்பதால் இது இயற்கையான சுபாவமாக இருக்கிறது.

நமது கர்த்தரின் போதனைகள் அனைத்தும் தூற்றுகிற ஆவிக்கு எதிராகவே இருக்கிறது. நாம் எந்த அளவுக்கு நாம் தூற்றப்படுகிறோம் என்பது முக்கியமல்ல, திருப்பி நாம் வையக் கூடாது. நாம் எந்த அளவுக்கு துன்பப்படுத்தப்பட்டாலும், நாம் பதிலுக்கு செய்யக் கூடாது. இதுதான் புது சிருஷ்டியின் பிரமாணம். நாம் திருப்பி வைவதற்கு பதிலாக, ஆசீர்வதிக்க வேண்டும். ஒருவர் நம்மை வையும் பொழுது, தேவன் உன்னை ஆசீர்வதிப்பாராக என்று நாம் சொல்ல வேண்டும் என்பது இதன் பொருளல்ல. ஆனால் அந்த மனிதர் துன்பத்தில் இருந்து உதவி தேவைப்படும் போது, அவர் நமக்கு செய்த அனைத்துதையும் ஒதுக்கிவிட்டு, மற்றவர்களுக்கு உதவ தயாராயிருப்பது போல இவருக்கும் உதவ தயாராயிருக்க வேண்டும்.

இந்த உதாரகுணம் மற்றும் தரும சிந்தனையின் ஆவியே கர்த்தருடைய ஜனங்களின் ஆவியாக இருக்க வேண்டும். தீயவைகளை பேசி, நம்மை துன்பப்படுத்தினவர்களுக்கு, நன்மை செய்தும், அவர்கள் நம்மை தவறாக புரிந்து கொண்ட நிலைமையை விளக்கியும் நாம் அவர்களை ஆசீர்வதிக்க வேண்டும். சந்தர்ப்பம் கிடைத்ததில் அவர்கள் இருளிலிருந்து வெளிச்சத்திற்கு வர உதவி செய்வதின் மூலம் அவர்களை ஆசீர்வதிக்க வேண்டும்.

நமது கர்த்தரின் மார்க்கத்தையும் நமது அனுபங்களுக்கும் கர்த்தரின் அனுபவங்களுக்கும் உள்ள ஒற்றுமையை கவனிப்பதின் மூலம் நமது விசுவாசம் அதிகமாக பலமடைகிறது. நமது கர்த்தரும் அவரது அப்போஸ்தலர்களும் யூத விசுவாச வீட்டாரினால் துன்பப்படுத்தப்பட்டார்கள். முழு யூத தேசமும் தேவனுடைய பிள்ளைகளாக வெளியரங்கமாக அறிவிக்கப்பட்டவர்கள். நமது கர்த்தரும் அவர்களை தமது சொந்தமானவர்களாக அங்கீகரித்தார். ''அவர் தமது சொந்தமானதிலே வந்தார்'' என்று எழுதப்பட்டுள்ளது. (யோவான் 1:11) ஆனால் அவர்களோ ஏற்றுக் கொள்ளவில்லை. ஆனால் அவரை துன்பப்படுத்தி சிலுவையிலும் அறைந்தார்கள். பிற்பாடு அவரது அப்போஸ்தலர்களையும் அவர்களது பின்னடியார்களையும் துன்பப்படுத்தினார்கள்.

விசுவாச வீட்டார் துன்பப்படுதலையே பிரத்தியேக உரிமையாக பெற்றிருந்திருக்கிறார்கள். சுவிசேஷ யுக முழுவதும் தேவனுடய பிள்ளைகளாக தங்களை வெளிப்படுத்திக் கொண்டவர்கள் மற்றவர்களை துன்பப்படுத்தினார்கள். கத்தோலிக்கர்களும் புரட்டஸ்டண்ட் சபையாரும்

**R5172 : page 36**

ஒருவரையொருவரும், யூதர்களையும் மற்றும் தெரிந்துகொள்ளப்பட்ட தேவனுடைய ஜனங்களையும் துன்பப்படுத்தியிருக்கிறார்கள். அதிகப்படியான துன்பங்களை கொடுத்தவர்கள் தங்களை தேவனுடைய பிள்ளைகளாக வெளிப்படுத்திக் கொள்பவர்களே. அவர்களில் பெரும்பாலோர் தங்களை அவ்விதமாக நினைத்திருந்தார்கள்.

இன்றைக்கும் கூட அப்படிப்பட்ட துன்பங்களே இருக்கின்றன. தங்களை கர்த்தருடைய ஜனங்கள் என்று வெளிப்படுத்திக் கொண்டவர்களிலிருந்தே அவர்கள் வருகிறார்கள். இதற்கு இசைவாக வேத வாக்கியங்கள் கூறுகிறதாவது: ''என் நாமத்தினிமித்தம் உங்களைப்பகைத்து உங்களை அப்புறப்படுத்துகிற உங்கள் சகோதரர், கர்த்தர் மகிமைப்படுவாராக என்கிறார்களே; அவர் உங்களுக்கு சந்தோஷம் உண்டாகும்படி காணப்படுவார்; அவர்களோ வெட்கப்படுவார்கள்.'' (ஏசாயா 66:5) இந்தக் கூற்று சத்தியத்தில் அனுதாபம் இல்லாத நமது சொந்த குடும்ப அங்கித்தினர்களுக்கும் பொருந்தும். தங்களை கிறிஸ்தவர்கள் என்று வெளிப்படுத்திக்கொள்ளுகிற நமது குடும்ப அங்கத்தினர்கள் மூலமாகவே வழக்கமாக துன்பங்கள் வருகின்றன. அவர்களது எதிர்ப்பு சொந்த காரணங்களுக்காக அல்ல, போதனைகளின் காரணத்தினாலேயே ஆகும். துன்பப்படுத்தப்படுகிறவர்கள் பார்க்கிற அதே வெளிச்சத்தில் அவர்கள் பார்ப்பதில்லை.

இது, தங்களை துன்பப்படுத்துகிறவர்கள் யாராயிருந்தாலும், அவர்களை தேவனுடைய பிள்ளைகள் அனுதாபத்துடன் பார்க்கச் செய்கிறது. தேவனுடைய சித்தத்தை செய்வதாக நினைத்துக் கொண்டு கொடுமைகள் நிறைவேற்றப்படுகின்றன என்பதை நிகழ்வுகள் மூலம் ஞாபகத்திற்கு கொண்டு வருகிறோம். கர்த்தராகிய இயேசுவை துன்பப்படுத்தினவர்கள் அவரை யார் என்று அறியாமலேயே செய்தனர். அப்போஸ்தலர் பேதுரு கூறுகிறதாவது: ''சகோதரரே, நீங்களும் உங்கள் அதிகாரிகளும் அறியாமையினாலே இதைச் செய்தீர்கள் என்று அறிந்திருக்கிறேன்.'' (அப்போஸ்தலர் 3:17) பரிசுத்த பவுல் கூறுகிறதாவது: ''அறிந்தார்களானால், மகிமையின் கர்த்தரை அவர்கள் சிலுவையில் அறைய மாட்டார்களே.'' (1 கொரிந்தியர் 2:8) தர்சு பட்டணத்தானாகிய சவுல் பரிசுத்த ஸ்தேவானையும் ஆதி திருச்சபையின் மற்றவர்களையும் துன்பப்படுத்தினபோது, தான் தேவனுடைய ஊழியத்தை செய்ததாக நினைத்ததை அவரே அதன்பிறகு நமக்கு சொல்கிறார். (அப்போஸ்தலர் 26:9-11)

## சத்தியத்தின் மேலுள்ள விசவாசமே துன்பத்திற்கு ஒரு காரணம்

சுவிசேஷ யுகம் முழுவதும் தேவனுடைய சத்தியத்திற்கு உண்மையாக இருந்தவர்கள், ''ஜெப ஆலயத்திலிருந்து புறம்பாக்கி'' வந்திருக்கிறார்கள். தேவனுடைய வார்த்தையை புரிந்து கொண்டவர்களை புறம்பாக்குவதற்கு மனிதர்களுடைய விசுவாசக்கோட்பாடே தடையாக இருந்திருக்கிறது. மதபேதமுள்ளவன் என்று கருதி அநேகரை சபை நீக்கப்பட்ட காலம் ஒன்றிருந்தது. இவர்களில் ஒரு கிறிஸ்தவ சகோதரனாகிய மைக்மேல் செர்வடஸ் ஒருவராவார். கழுமரத்தில் அவரது பயங்கரமான மரணம் ஜான் கேல்வின் அவர்களால் வெளிப்படுத்தப்பட்டது. இந்த காரியங்கள் எல்லாம் வேதவாக்கியங்களின்படி சரியாக நிறைவேறியது. ''அவர்கள் உங்களை ஜெப ஆலயங்களுக்கு புறம்பாக்குவார்கள்; மேலும் உங்களை கொலை செய்கிறவன் தான் தேவனுக்கு தொண்டு செய்கிறவனென்று நினைக்கும் காலம் வரும்.'' (யோவான் 16:2)

ஜெப ஆலயங்களின் பொறுப்பாளர்கள் எப்பொழுதுமே கெட்டவர்கள் அல்ல. தர்சு பட்டணத்தானாகிய சவுல் புருஷர்களையும் ஸ்திரீகளையும் இழுத்துக் கொண்டு போய் காவலில் போட்டதுபோல அவர்கள் தவறாக புரிந்து கொண்டிருந்தார்கள். (அப்போஸ்தலர் 8:3) அதே நிலைமையே இப்பொழுதும் இருக்கிறது. இருளானது ஒளியை வெறுக்கிறது. யாராவது ஒருவர் தேவனுடைய வார்த்தைகளினால் அறிவு பெறும் போது, இப்படியாக சொல்லப்படுகிறார்கள்: ''நீங்கள் எங்களோடு இருந்தால் இந்த காரியங்களை எல்லாம் சொல்லக் கூடாது.'' தேவனிடத்தில் விசுவாசமாயிருக்கிறவர்கள் இப்படியாக ஜெப ஆலயத்துக்கு புறம்பாக்கப்படுகிறார்கள்.

நமது நாட்கள் விநோதமானவை. மற்ற நாட்களைப் போல அல்ல. தெய்வீக திட்டம் அதன் வெளிச்சத்தில் அவ்வளவு அழகாக இருக்கிறதை நாம் பார்க்கிறோம். மற்றவர்கள் இருளில் இருக்கிறார்கள். தேவனுடைய சத்தம் மனசாட்சியின் சத்தம், அறிவு ஒளியின் சத்தம் தேவனுடைய

**R5173 : page 36**

ஜனங்களை பாபிலோனை விட்டு வெளியே வரும்படி அழைக்கிறது. அது தேவனுடைய குணலட்சணத்தையும் திட்டத்தையும் வார்த்தைகளையும் தவறாக அறிவிக்கிறது. நமது சத்துருக்களை பழிவாங்கும் உணர்வுக்கு வருவதற்கு பதிலாக, அவர்களுக்காக அனுதாபத்தை உணரவேண்டும். அவர்களுடன் அல்ல, அவர்களுக்காக அனுதாபத்தை உணர வேண்டும். நமது கர்த்தரின் நாட்களில் யூதர்கள் இருந்தது போலவே இவர்களும் இருக்கிறார்கள் என்பதை நாம் உணர வேண்டும். அவர்கள் தாங்கள் செய்வது இன்னது என்பதை அறிந்திருப்பார்களானால், அவர்கள் தாங்கள் நடப்பித்த காரியங்களுக்காக வெட்கப்பட்டு போயிருப்பார்கள்.

இந்த காலத்தின் துன்புறுத்துதல் சரித்தின் வேறு எந்த காலத்தையும்விட வேறானது. அநேக உண்மையுள்ள கர்த்தரின் அடியார்கள் தேவனுடைய வார்த்தைகளில் விசுவாசமாக இருந்தபடியால் கண்டனத்திற்கும் அவதூறுக்கும் ஆளானார்கள். கர்த்தரை பேசியதைப் போல அவரிடத்தில் விசுவாசமாயிருக்கிறவர்களையும் தீமையான வார்த்தைகளில் பேசுவார்கள் என்று தேவனுடைய வார்த்தை நமக்கு உறுதிப்படுத்துகிறது. அவரது வார்த்தைகளை நமது மனதில் வைத்துக் கொண்டு, அவரது ஊழியர்களாக மேன்மை பெற்றிருக்கிற அளவுக்குத் தக்கதாக அவரது உண்மையான அடியார்களுக்கு விரோதமாக தவறான குற்றச்சாட்டுகளை நேரடியாகவும் மறைமுகமாகவும் சொல்வார்களானால் நாம் ஆச்சரியப்படக்கூடாது.

''என்னிமித்தம் பலவிதமான தீமையான மொழிகளை உங்கள் பேரில் பொய்யாய் சொல்வார்கள்'' (மத்தேயு 5:11) என்ற நமது கர்த்தரின் எச்சரிக்கை உண்மையான கிறிஸ்தவர்களை அவதூறாக பேசுகிறவர்கள், ''நீங்கள் கிறிஸ்துவின் அடியார்களாக இருப்பதினால் அவரினிமித்தம் இவைகளை நாங்கள் உங்களுக்குச் செய்கிறோம்'' என்று கூறுவார்கள் என பொருள்படாது. இப்படியாக யாரும் துன்புறுத்தப்பட்டதாக நாம் கேள்விப்பட்டதில்லை. ஆகையால் இப்படிப்பட்ட ஒரு மார்க்கம் நமது கர்த்தர் கூறியதின் பொருளாக இருக்க முடியாது. நமது கர்த்தரின் அடியார்கள் அவரைப்போல மதிப்பிற்குரியவர்களாக, நிதானமானவர்களாக, உண்மையுள்ளவர்களாக, நேர்மையானவர்களாக, நற்குணமுள்ளவர்களாக, தெளிந்த புத்தியுள்ள ஆவியை உடையவர்களாக இருந்ததால் பேரளவான மதத்தினால் அதிகமாக மதிக்கப்பபெற்றார்கள். தேவனுடைய வார்த்தைகளுக்கு உண்மையுள்ளவர்களாக இருந்ததினால் அவர்கள் துன்புறுத்தப்படவில்லை என்பதே அவர் கூறியதின் பொருள். உண்மையுடன் பலரும் அறிந்த அவர்களது தப்பறைகளை சுட்டிக் காட்டுவதாலும் சத்தியத்தின் மேலுள்ள விசுவாசத்தினாலுமே பேர் சபைகளில் பிரசித்தி பெற்றவர்களால் வெறுக்கப்படுகிறார்கள் என்பதே அதன் பொருளாகும்.

## பொன்னான கட்டளையே கிறிஸ்தவர்களுக்கு ஒரு சோதனை

பொன்னான கட்டளையை கிறிஸ்தவ சபை மக்கள் அனுசரிக்கிறார்களா என்று இந்த நிபந்தனைகளே சோதித்துக் கொண்டிருக்கின்றன. அவர்கள் குரோதம், பகைகள், சண்டைகள், எதிர்ப்புகள் ஆகியவற்றின் மூலம் தீமையான மொழிகளை பேசும்போது, இந்த கட்டளையின் கீழ் தங்களையே கண்டனம் செய்து கொள்ளுகிறார்கள். ஏனெனில் வதந்தி மூலமாகவோ இட்டுகட்டிய பொய்கள் மூலமாகவோ அல்லது குரோதத்தின் மூலமாகவோ மற்றவர்கள் தங்களைப்பற்றி தீமையாக பேசுவதை அவர்கள் விரும்பமாட்டார்கள் என்பதை அவர்கள் நன்றாக அறிவார்கள்.

இந்த துன்புறுத்துதல்களையும், எதிர்ப்புகளையும் முழுமனதோடு சகிப்பதற்கு விருப்பமுடையவர்களாக இருக்கிறார்களா என்று கர்த்தருடைய ஜனங்களை இந்த நிபந்தனைகள் சோதிக்கக் கூடியதாக இருக்கின்றன. இது கிறிஸ்துவின் சீஷர்களாக இருப்பதற்கான விலையின் ஒரு பகுதியாக இருக்கிறது. அழுத்தத்தின் காரணமாக அவர்கள் திருப்பி வைதாலோ, தூற்றினாலோ அல்லது புறங்கூறினாலோ, அவர்கள் இராஜ்யத்தின் ஒரு இடத்திற்கு தகுதியற்றவர்கள் என்பதை இப்படியாக வெளிப்படுத்துகிறார்கள். அதாவது இந்த பாடங்களை அமைதியுடனும் நீடிய பொறுமையுடனும் அவர்கள் பெற்றுக் கொண்டால் இப்படியாக தங்களது இரட்கரின் குணலட்சண சாயலில் அதிகமாக அபிவிருத்தி அடைந்து எதிர்கால மகிமையில் உடன் சுதந்தரராவதற்கு பாத்திரராவார்கள்.

''நீங்கள் பூமிக்கு உப்பாயிருக்கிறீர்கள்'' என்ற நமது கர்த்தரின் அறிவிப்பானது அவரது போதனைகளை கவனித்து அவரது குணலட்சண சாயலை அபிவிருத்தி செய்கிற அவரது சீஷர்களுக்கு மிகவும் பொருத்தமாக இருக்கிறது. அப்பு என்பது அழிவை தடுக்க உதவுகிறது. அதுபோல இந்த உண்மையுள்ளவர்களும் பாதுகாக்கிறவர்களாக இருக்கிறார்கள். பூமி கிறிஸ்துவின் முதலாம் வருகையின் காலத்தில் சீர் கேட்டிலும்

அழியும் நிலையிலுமிருந்தது. ஆனால் கிறிஸ்துவின் சரீர அங்கங்களிலிருந்து பாதுகாப்பு கொடுக்கப்பட்டது. கிறிஸ்தவ தேசங்கள் என்று அழைக்கப்படுகிறவர்களிடத்தில் இந்த செல்வாக்கு இன்னும் இருக்கிறது.

இன்றைக்கும் கூட மகா இரட்சகரின் அர்ப்பணம் செய்த உண்மையான விசுவாசிகள் மிகக் குறைவாக இருந்த போதும், இரட்சகரின் போதனைகளின் சாரம் உலகின்மேல் ஒரு பரந்த செல்வாக்கை பெற்றிருக்கிறது. அது இல்லாததிருந்தால் சந்தேகத்திற்கிடமில்லாமல் நாசமும் முழுமையான அழிவும் வெகு காலத்திற்கு முன்பே வந்திருக்கும். அப்படியிருந்தும், ஊழலும் ஊழலின் செல்வாக்கும் எல்லா இடங்களிலும் கிரியை செய்கிறது. இந்த கூற்றின் உண்மையை நாம் அதிகமதிகமாக உணருகிறோம். கிறிஸ்துவின் சரீரத்தின் கடைசி அங்கம் திரைக்குப்பின்னால் சென்ற பின்பு உப்பின் சாரம் போய்விடும். பிறகு களங்கமானது வெகு சீக்கிரத்தில் பிடித்துக் கொண்டு அதன் விளைவாக யாதொரு ஜாதியாரும் தோன்றினது முதல் உண்டாயிராத ஆபத்துக் காலம் உண்டாயிருக்கும். (மத்தேயு 24:21; தானியேல் 12:1)

முற்றிலும் கர்த்தருக்கு சொந்தமான அவருடைய அர்ப்பணம் செய்த ஜனங்கள், அவர்களுடைய எல்லா நெருக்கத்திலும் அவர் நெருக்கப்பட்டார் என்கிற உண்மையை வேதவாக்கியங்கள் குறிப்பிட்டு கூறுகின்றன. (ஏசாயா 63:9) தர்சு பட்டணத்தானாகிய சவுல் ஆதிகால சபையை துன்பப்படுத்திக் கொண்டிருந்தபோது, தமஸ்குவுக்கு போகிற வழியிலே கர்த்தர் அவனை கூப்பிட்டு, ''சவுலே, சவுலே நீ ஏன் என்னை

**R5173 : page 37**

துன்பப்படுத்துகிறாய் என்று கேட்டார். அதற்கு அவன், ஆண்டவரே, நீ யார் என்றான். அதற்கு கர்த்தர்: நீ துன்பப்படுத்துகிற இயேசு நானே என்றார்.'' (அப்போஸ்தலர் 9:4,5) சவுல் மகிமையடைந்த கர்த்தரை நேரடியாக துன்பப்படுத்தவில்லை. இயேசுவின் சீஷர்களைத்தான் சவுல் துன்பப்படுத்திக் கொண்டிருந்தான். புது சிருஷ்டியை அல்ல, மாம்சத்தை மட்டுமே. அதிலிருந்து அவருடைய சீஷர்களுடைய மாம்சத்தை தமது மாம்சமாக ஏற்றுக் கொள்கிறார் என்று அறிந்து கொள்ளுகிறோம். சபையானது, கிறிஸ்துவினுடைய உபத்திரவங்களில் குறைவானதை நிறைவேற்றிக் கொண்டிருப்பதாக சொல்லப்படுகிறது. (கொலோசெயர் 1:24)

நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கு உடன் சுதந்தரராயிருக்கும்படி தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட கிறிஸ்துவின் சபையை, சுவிசேஷ யுகம் முழுவதும் உலகமானது துன்பப்படுத்திக் கொண்டிருக்கிறதை அது அறியாதிருக்கிறது. (ரோமர் 8:17) பிற்காலத்தில் மனுக்குலத்தின் கண்கள் திறக்கப்படும்போது, தாங்கள் என்ன செய்திருக்கிறோம் என்பதை உணர்ந்து அவர்களது நடத்தைக்காக வெட்கப்பட்டுப் போவார்கள். தர்சு பட்டணத்தானாகிய சவுல், தான் தேவனுக்கு விரோதமாக போராடினதை கண்ட பிறகு, அவனுடைய வாழ்க்கை முறை மாறிப்போனது.

## பாளயத்துக்கு வெளியே எரித்ததின் உண்மைப்பொருள்

நமது கர்த்தர் மாம்சத்தில் துன்பப்பட்டது போல அவரது சரீரமாகிய சபையின் அங்கங்களும் துன்பப்படுவார்கள். (எபேசியர் 1:22, 23) ''இப்படியிருக்க, கிறிஸ்து நமக்காக மாம்சத்திலே பாடுபட்டபடியினால், நீங்களும் அப்படிப்பட்ட சிந்தையை ஆயுதமாக தரித்துக் கொள்ளுங்கள்'' என்று கூறி நம்மை இதை எதிர்பார்க்கும்படி அறிவுரை கூறுகிறார். (1 பேதுரு 4:1) துன்பப்பட்டது மாம்சமேயன்றி புது சிருஷ்டியல்ல. மாம்சத்தில் நாம் துன்பப்படும்போது, நாம் ஆவியிலும் அபிவிருத்தியடைந்து கொண்டிருக்கிறோம்.

சங்கீதம் 44:22 இல் நாம் வாசிக்கிறதாவது: ''உமது நிமித்தம் எந்நேரமும் கொல்லப்படுகிறோம்; அடிக்கப்படும் ஆடுகளைப் போல எண்ணப்படுகிறோம்.'' இந்தக் கூற்று, கர்த்தராகிய இயேசுவை தலையாகக் கொண்டிருக்கிற கிறிஸ்துவின் அங்கங்கள் முழுவதற்கும் பொருந்தக்கூடிய ஒரு தீர்க்கதரிசனமாக இருக்கிறது என்று பரிசுத்த பவுல் காண்பிக்கிறார். (ரோமர் 8:36) அந்த நாள் பாவநிவாரண நாளின் உண்மைப் பொருளாகிய சுவிசேஷ யுகத்தைக் குறிக்கிறது. (2 கொரிந்தியர் 6:2) நிழலான பாவ நிவாரண நாளில் நிழலான பலிகள் செலுத்தப்பட்டது போல, சுவிசேஷ யுகம் முழுவதும் ''விசேஷித்த பலிகள்'' செலுத்தப்பட்டு வருகின்றன. (எபிரேயர் 9:23; 13: 11-13) இந்த ''மேலான பலிகள்'' நமது கர்த்தரில் ஆரம்பித்து சபையாகிய அவரது சரீரத்துடன் தொடர்கிறது.

உண்மையான பலியானது நமது கர்த்தரின் அர்ப்பணிப்பில் ஆரம்பித்தது. அது தேவனிடம் அவரது ஜீவனின் முழு அர்ப்பணிப்பாக இருந்தது. பிதாவானவர் தமது சித்தத்தின்படி அவரை பயன்படுத்திக் கொள்ளலாம். சபையானது அவரது அடிச்சுவட்டை பின்பற்றுகிறது. நமது அர்ப்பணிப்பு என்பது உலகத்திற்கு மரித்ததாகவும், நமது பூமிக்குரிய நம்பிக்கைகள், நோக்கங்கள் மற்றும் குறிக்கோள்கள் மரித்ததாகவும் இருக்கின்றன. நமது கர்த்தரின் விஷயத்தில் தியாக மரணம் என்பது போதித்தல், குணப்படுத்துதல் முதலியவைகளில் அவரது சரீர பலத்தை இழப்பது மாத்திரமல்ல, அவரைச் சுற்றியுள்ளவர்களினால் வரும் எதிர்ப்புகளினால் வரும் துன்பத்தையும் அனுபவிப்பதாகும். அவர் தமது சொந்த குடும்ப அங்கத்தினர்கள் மூலமாகவும் தொல்லைகளை அனுபவித்தார். எனவே அனுதினமும் இயேசு மரித்தார்.

நமது பரம பிதாவினிடத்தில் வைத்திருக்கிற நமது விசுவாசத்திற்கு ஏற்றபடியும், நமது அர்ப்பணிப்பின் நிபந்தனைகளுக்கு ஏற்றபடியும் நாளும் இப்படிப்பட்ட அனுபவங்களை பெறுவோம். நமது பலியின் உடன்படிக்கையில் நமது உண்மைத் தன்மையானது உலகம், மாமிசம்

மற்றும் பிசாசிடமிருந்து எதிர்ப்பை கொண்டு வரும். குறிப்பாக நமது துன்புறுத்தலானது போதுமான அளவுக்கு அபிவிருத்தி அடையாத கிறிஸ்தவர்களிடமிருந்தே வரும்.

பரிசுத்த பவுல் தனது சொந்த காரியத்தைப்பற்றி பேசும்போது, தான் அனுதினமும் சாகிறதாக கூறுகிறார். (1 கொரிந்தியர் 15:31) கர்த்தரின் ஊழியத்தில் தனது ஜீவனை அர்ப்பணிக்கிற அனைவருக்கும் இந்த கூற்று பொருந்தும். சில சமயங்களில் தனது உடல் பலத்தை செலவிடுதினால் வரும். சில சமயங்களில் தனது நாவினால் நமக்கு தீங்கிழைக்கிற, காயப்படுத்துகிற, புண்படுத்துகிற சிலரால் வருகிறது. இந்த அனுபவம் நிழலில் பாளையத்துக்கு புறம்பே மாமிசத்தை எரிப்பதின் மூலம் குறிப்பிடப்படுகிறது. பாளையமானது நாடுகடத்தப்பட்ட ஒரு நிலைமையை நிழலாக காட்டுகிறது.

நமது கர்த்தர் முன்னுரைத்தது போல, கர்த்தரின் உண்மையுள்ள ஊழியர்கள் உலகத்தினால் ஒதுக்கி வைக்கப்படுவார்கள். (மத்தேயு 24:9; யோவான் 16:1-3) பிதாவின் சித்தத்திற்கு தங்களை முழுவதுமாக அர்ப்பணித்த அவர்களது மனோபாவம் சரியாக உணரப்படாது. ஏனெனில் உலகத்திற்கு அது முட்டாள்தனமாக தோன்றும். இது ஒரு கண்டனமாக இருக்கிறது. நமது கர்த்தர் கூறுகிறதாவது: ''பொல்லாங்கு செய்கிற எவனும் ஒளியைப் பகைக்கிறான், தன் கிரியைகள் கண்டிக்கப்படாதப்படிக்கு ஒளியினிடத்திற்கு வராதிருக்கிறான்.'' (யோவான் 3:28)

மரணபரியந்தம் உண்மையுள்ளவர்களாக இருப்பது பலியின் உடன்படிக்கையின் ஒரு நிபந்தனையாக இருக்கிறது. சில சமயங்களில் மரணமானது சீக்கிரம் வரலாம்; மற்றவர்களுககு தாமதமாக வரலாம். பரிசுத்த ஸ்தேவான் மரணபரியந்தம் உண்மையுள்ளவராயிருந்தார். கிறிஸ்தவ அனுபவத்தில் அவருக்கு மரணமானது சீக்கிரம் வந்தது. பரிசுத்த பேதுருவும் உண்மையுள்ளவராக இருந்தார். ஆனால் அவருக்கு மரணம் நீண்ட காலத்திற்கு பிறகே வந்தது. ஜெயங்கொள்ளுகிறவர்களுக்கு கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தம்: ''நீ மரணபரியந்தம் உண்மையாயிரு, அப்பொழுது ஜீவகிரீடத்தை உனக்குத் தருவேன்.'' (வெளிப்படுத்தல் 2:10) ''அவரோடு கூட பாடுகளைச் சகித்தோமானால், அவரோடே கூட ஆளுகையும் செய்வோம்.'' (தீமோத்தேயு 2:12)

---

See more Books & Articles at www.foodfornewcreature.com